**சுருக்கம்**

உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை – மானியக் கோரிக்கை 2019 – 2020 – மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ரூ. 8.00 கோடி மதிப்பீட்டில் மின் ஆக்கிகள் நிறுவுவதற்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (அ1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 87

நாள்: 14.08.2019
விகாரி வருடம், ஆடி – 29
திருவள்ளுவர் ஆண்டு – 2050

படிக்க:–

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அவர்களின் கடிதம் எண். CE/JE(P)/Food Minister Announcement/ 4830/2019 நாள் 15.07.2019.

ஆணை:-

2019–2020ம் ஆண்டு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட பல்வேறு அறிவிப்புகளோடு கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> **“தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் இயந்திர கையாளுமை மற்றும் மூட்டை தைத்தல் போன்ற பணிகள் மின்தடையால் ஏற்படும் பாதிப்பினை தவிர்க்க 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் ஆக்கிகள் நிறுவப்படும்”.**

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பொது விநியோகத் திட்டத்திற்கான நகர்வுகள் அதாவது பொருட்களை லாரியில் ஏற்றுதல் மற்றும் இறக்குதல், அட்டியிடுதல் மூட்டை தைத்தல் போன்ற பணிகள் மனித உழைப்பினைக் கொண்டு தொழிலாளர்களால் கையாளப்படுகின்றன எனவும், மனித ஆற்றலினால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்த்திடவும், தொழிலாளர்கள் பற்றாக்குறையை கருத்தில் கொண்டும் தற்பொழுது கிடங்கு பகுதிகளில் மின்தடை ஏற்படும் தருணங்களில் இயந்திர கையாளுமை மற்றும் தைத்தல் போன்ற பணிகள் பாதிப்படைவதை தவிர்க்கும் பொருட்டு 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் ஆக்கிகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் நிறுவுவதற்கு நிர்வாக அனுமதி பெற்றுத் தருமாறு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2–ல் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் அவர்களின் கருத்துருவை ஆய்வு செய்து மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக கிடங்கு பகுதிகளில் மின்தடை ஏற்படும் தருணங்களில் இயந்திர கையாளுமை மற்றும் தைத்தல் போன்ற பணிகள் பாதிப்படைவதை தவிர்க்கும் பொருட்டு 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின் ஆக்கிகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிதியில் நிறுவுவதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தயானந்த் கட்டாரியா
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
சென்னை–600 010.

<u>நகல்:-</u>
மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–600 009.
நிதி (கூ.உ(ம)நு.பா) துறை,
சென்னை–600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
14/8/19.

14.8.19.